**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C.No: 5/2017**

**Deposition of Witnesses for PW1**

| Name | : | திரு.கணேசலிங்க பாண்டி | Caste: |
|---|---|---|---|
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **20.01.2025**

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.

## முதல் விசாரணை

நான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம் ஒருங்கிணைந்த குற்ற தடுப்பு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த கேணிக்கரை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது 11.12.2015ம் தேதி 20.30 மணியளவில் தேவிப்பட்டிணம் காவல் நிலைய ஆய்வாளர் பொறுப்பு கேணிக்கரை காவல் ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் ராமநாதரபுரம் பட்டிணம்காத்தான் ஈ.சி.ஆர் ஜங்சன் அருகே ஆய்வாளர் அவர்களுடன் நான் மற்றும் மு.நி.கா.ரவிசந்திரன். மு.நி.கா.மோகன் ஆகியோருடன் வாகன சோதனை செய்தபோது டி.என்.65 டு 0068 டாடா மான்சா என்ற காரை ராமேஸ்வரத்தில் இருந்து ராமநாதபுரம் நோக்கி வந்த காரை நிறுத்தி சோதனை செய்ய முயன்றபோது நிற்காமல் திருப்ப முயன்று திருப்ப முடியாமல் காரை நிறுத்தி விட்டு காரில் இருந்த நபர் தப்பி ஓடியவர் அருகில் இருந்த காம்பவுண்ட் சுவரில் ஏறி குதித்தபோது அவருக்கு 2 முழங்காலிலும் உடலில் காயம் ஏற்பட்டது. பின்னர் விசாரிக்க மேற்படி நபர் செல்வக்குமார். வயது 32.•.15. த.•.பெ.ராமு. கிழக்கு கடற்கரை. ராமேஸ்வரம் என தெரியவந்தது. ஆய்வாளர் அவர்கள் வரவழைக்கப்பட்ட விஏஓ மற்றும் அவரது உதவியாளர் சாட்சிகளின் முன்னிலையில் மேற்படி நபர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் ஓட்டி வந்த காரின் பின்புறம் சீட்டிற்கு அடியில் அரசால் தடை செய்யப்பட்ட அதிக போதை தரக்கூடிய சுமார் 5 கிலோ கஞ்சாவை பேப்பர் சுற்றப்பட்ட நிலையில் எடுத்துக்கொடுத்தார். பின்னர் விசாரிக்க சிறு சிறு பாக்கெட்டுக்களாக வியாபாரம் செய்வதற்காக வாங்கி வந்ததாக கூறினார். மேலும் அவரிடமிருந்து பணம் ரூ.14.500.•. 7 செல்போன்களையும். மேற்படி காரையும் ஆய்வாளர் அவர்கள் சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றி அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு ராமநாதரபுரம் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்தும் நிலையம் வந்து வழக்கு பதிவு செய்தார். பிணை சம்பந்தமாக ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன். மண்டபம் காவல் நிலையத்தின் எதிரிக்குள்ள வழக்கு சம்பந்தமாக மண்டபம் ஆய்வாளராக பணிபுரிந்த தனபால் ஆய்வாளருடன் போன் மூலம் தொடர்பு இருந்ததாக தெரிவித்தார். (மேற்படி சங்கதிகளை சாட்சி கூறுவதற்கு எதிரி தரப்பில் ஆட்சேபனையுடன் பதிவு செய்யப்படுகிறது). எதிரி தற்போது முன்னிலையாகவில்லை என்றும். எதிா தற்போது நீதிமன்றத்தில்

ஆஜராகவில்லை. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

இந்த வழக்கு சம்பந்தமாக நான் எந்த ஆவணங்களிலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். தகவல் கிடைத்த விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது. தகவல் தெரிந்தவுடன் விஏஓ. தலையாரி. தனி நபர் சாட்சிகளை அழைத்து செல்லவில்லை. எதிரி காம்பவுண்ட் சுவரில் ஏறி குதித்ததாக சொல்லப்படும் காம்பவுண்ட் யாருடையது என்று கேட்டால் எனக்கு அது பற்றி தெரியாது. அத்தாட்சியை கையால் எழுதினார்கள். யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலம் யாரால் எழுதப்பட்டதா அல்லது கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதா என்ற விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. ஆய்வாளர் என்னை 11.12.2015ம் தேதி விசாரித்தார். ரூ.14,000/- பணத்தின் டினாமினேசன் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. ஆய்வாளர் விசாரித்தபோது யார் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் காரில் கஞ்சா கடத்தி வந்ததாக சொல்வது பொய் என்றும், எதிரியிடமிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டதாக சொல்வது பொய் என்றும், நான் சமப்வ நேரத்தில் ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரியை காவல் நிலையத்தில் வைத்து போலீசார் தாக்கியதால் தான் காயம் ஏற்பட்டது என்றும் மேற்படி காயங்களை மறைப்பதற்காக அவர் காம்பவுண்ட் சுவரில் ஏறி குதித்தபோது காயங்கள் ஏற்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.